**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 314/2023, 316/2023

. ம.சா3 முருகன்

| | |
|---|---|
| Name | : முருகன் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 28.01.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த மனுவில் 3ம் நபர். என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. என்னுடை ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் மூ.த,சா.ஆ 1

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தானது சாலையில் மத்தியில் நடைபெற்றது என்றால் சரியல்ல. சாலையின் ஓரத்தில் நடந்தது. விபத்தில் இறந்து போன இருவரும் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். விபத்தின் போது சக்திவேல் இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்தார். பின்னால் முருகன் அமர்ந்து வந்தார். சக்திவேல் இருசக்கர வாகனத்தை கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ஒட்டி வந்தார். வடக்கே திரும்புவதற்காக நின்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டது. அந்த இடத்தில் நெடுஞ்சாலை என்பதால் மத்தியில் தடுப்பு சுவர் உள்ளது என்றால் சரிதான். வாகனங்கள் குறுக்கே கடந்து வடக்கே செல்வதற்காக தனியாக இடம் ஒதுக்கப்பட்டு

அது போன்ற வழி எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழி உள்ளது. நான் சொல்வது போல் வழி எதுவும் இல்லை என்றும், இது சம்பந்தமாக காவல்துறையினர் மாதிரிவரைபடத்தில் வழி இல்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மாதிரிவரைபடத்தை தாக்கல் செய்தால் வழி இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பேரூந்தை ஓட்டி வந்த நபர் கவனமாக தான் ஓட்டி வந்தார் என்றும், இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் பேரூந்தை கவனிக்காமல் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். எனது உறவினருக்கு ஆதரவாக நான் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.